

சென்னையில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம் நேற்று நலக் குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முன் வெளியீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுகிறது!

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுதிகள் !

## ஆ.ராசா எம்.பி. – நூல் வெளியிட – கி.வீரமணி–தொல். திருமாவளவன் – சுப. வீரபாண்டியன் – தி.வேல்முருகன் சிறப்புரை!

சென்னை, டிச.23-

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தாக்கங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு பதினாறு தொகுப்புகளாக வெளியிடப்படுகின்றன.

வருகிற 5.1.2025 அன்று சென்னை வண்டலூர் - கோவிலஞ்சேரி - வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (வி.ஐ.டி.) வளாகத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் - 16 தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகிறார்.

நூல்களை வி.ஐ.டி. துணை வேந்தர் கோ.விசுவநாதன் பெற்றுக்கொள்கிறார்.

மேலும் நூல்களை சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ஔவை ந.அருள், திரைப்படக் கலைஞர் பொன் வண்ணன், எஸ்.பாலாஜி (எம்.எல்.ஏ. - வி.சி.க.), மல்லை சத்யா (ம.தி.மு.க.), முன்னாள் எம்.எல்.ஏ. வீ.தமிழ்மணி ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், ஊடகவியலாளர் ப.திருமா வேலன், ம.தி.மு.க. பொருளாளர் மு.செந்திலதிபன், சூலூர்-பாவேந்தர் பேரவை - செந்தலை ந.கவுதமன், வாலாசா வல்லவன், பேராசிரியர் த.செயராமன், ப.மருதநாயகம், சு.குமணராஜா, ஆரூர் புதியவன் ஆகியோர் வாழ்த்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

மா.பூங்குன்றன், இறை. பொற்கொடி ஆகியோர் தலைமையில் தொடக்க உரைகளை கி.குணத் தொகையன், ப.அருளியார் மற்றும் தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன் ஆகியோர் ஆற்றுகின்றனர்.

கோ.பாவேந்தன் ஒருங்கிணைப்புரையில், இ.அங்கயற்கண்ணி நன்றியுரை கூறுகிறார்.

பாவலரேறு பெருஞ்சித்தனாரின் எழுத்தடைவுகள் முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது.

தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்தின் மூலம்

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள நிதி எவ்வளவு?

## மக்களவையில் வேலூர் கதிர் ஆனந்த் கேள்வி



புதுடெல்லி, டிச. 23-

தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் (NRHM) திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள நிதியுதவி குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திமுகவின் வேலூர் மக்களவைத் தொகுதி எம்பி D.M.கதிர் ஆனந்த் கேள்வி

தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் (NRHM) திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு போதுமான நிதியுதவி அளித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள்?

NRHM இன் கீழ் கிராமப்புறங்களில் சேவை செய்வதற்காக மருத்துவ அதிகாரிகள், பல் மருத்துவர்கள் மற்றும் கண் மருத்துவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திட்டங்கள் உள்ளடக்கமா? அப்படியானால், அதன் விவரங்கள்? மற்றும்

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் (PHC) ஆஷா பணியாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்களை பணியமர்த்துவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் சிறப்பு திட்டங்கள் உள்ளதா? மாநில வாரியாக அதன் விவரங்கள் என்ன?

**பதில்:** ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

சமமான, மலிவு மற்றும் தரமான சுகாதார சேவைகளுக்கான உலகளாவிய அணுகலைப் பெறுவதற்கான நோக்கத்துடன், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தேசிய ஊரக சுகாதார இயக்கம் உட்பட தேசிய சுகாதார இயக்கத்தை செயல்படுத்துகிறது. தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் 2021-22 நிதியாண்டு முதல் 2023-24 நிதியாண்டு வரை தமிழ்நாடு மாநிலத்திற்கான மத்திய வெளியீட்டின் விவரங்கள் பின்வருமாறு:

2021-22 ஆண்டு ரூ.1.631.91 கோடி

2022-23 ஆண்டு ரூ.1.652.24 கோடி

2023-24 ஆண்டு ரூ.1,996.06 கோடி

குறிப்பு: 1. மேற்கண்ட வெளியீடுகள் மத்திய அரசு தொடர்பானவை. மானியங்கள் & மாநில பங்கு பங்களிப்பை சேர்க்கவில்லை.

பொது சுகாதாரம் & மருத்துவமனைகள் என்பது மாநில அரசின் கட்டுப்பாட்டில். மருத்துவ அலுவலர்கள், பல் மருத்துவர், கண் மருத்துவர், ஆஷா பணியாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்களை பணியமர்த்துவது உட்பட அனைத்து தனிப்பட்ட விஷயங்களும் அந்தந்த மாநில/யூனியன் பிரதேச அரசுகளிடம் உள்ளது.

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்கள் பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்த தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்கள் திட்ட அமலாக்கத் திட்டங்களில் (பிஐபி) மற்றும் ஒட்டுமொத்த ஆதார உறைக்குள் இடுகையிட்ட தேவைகளின் அடிப்படையில் வழங்குகிறது,

மனித வளப் பற்றாக்குறையை (HR) நிவர்த்தி செய்வதற்காக, NHM இன் கீழ், N இன் கீழ் நாட்டின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் பயிற்சி செய்வதற்கு மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களை ஊக்குவிப்பதற்காக பின்வரும் வகையான ஊக்கத்தொகைகள் மற்றும் கௌரவங்கள் வழங்கப்படுகின்றன:

கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் சேவையாற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கும் அவர்களது குடியிருப்பு குடியிருப்புகளுக்கும் கடினமான பகுதி கொடுப்பனவு.

மகப்பேறு மருத்துவர்கள்/அவசரகால மகப்பேறியல் சிகிச்சை (EmoC) பயிற்சி பெற்ற, குழந்தை கள் நல மருத்துவர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்/உயிர்காக்கும் மயக்க மருந்து திறன்கள் (LSAS) பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கு கௌரவ ஊதியம் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் அறுவைசிகிச்சை பிரிவுகளை நடத்துவதற்கான நிபுணர்களின் இருப்பை அதிகரிக்கவும் வழங்கப்படுகிறது.

மருத்துவர்களுக்கான சிறப்புச் சலுகைகள், சரியான நேரத்தில் ANC பரிசோதனை மற்றும் பதிவை உறுதிசெய்வதற்காக ANM-க்கான ஊக்கத்தொகை, இளம்பருவ இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கியச் செயல்பாடுகளை நடத்துவதற்கான ஊக்கத்தொகை.

"You Quote We Pay" போன்ற உத்திகளில் நெகிழ்வுத்தன்மை உட்பட நிபுணரை ஈர்ப்பதற்காக பேச்சுவார்த்தைக்குட்பட்ட சம்பளத்தை வழங்க மாநிலங்களும் அனுமதிக்கப்படுகின்றன

கடினமான பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முதுகலை பட்டதாரி படிப்புகளில் முன்னுரிமை சேர்க்கை மற்றும் கிராமப்புறங்களில் தங்கும் வசதியை மேம்படுத்துதல் போன்ற பணமற்ற ஊக்கத்தொகைகள் NHM இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையை சமாளிக்க NHM-ன் கீழ் மருத்துவர்களின் பல திறன்கள் ஆதரிக்கப்படுகின்றன. தற்போதுள்ள HR இன் திறன் மேம்பாடு என்பது NHM இன் கீழ் சுகாதார விளைவுகளில் முன்னேற்றத்தை அடைவதற்கான மற்றொரு முக்கிய உத்தியாகும்.

மேலும், 2022-23 நிதி யாண்டுக்கான இந்தியாவின் ஹெல்த் டைனமிக்ஸ் ஆஃப் இந்தியா (உள்கட்டமைப்பு மற்றும் மனித வளங்கள்) அறிக்கையிலிருந்து NHM இன் கீழ் மனித வளங்களின் விவரங்களை அணுகலாம், கீழே உள்ள இணைப்பு:

https://mohfw.gov.in/sites/default/files/Health%20Dynamics%20of%20India%20%28Infrastructure%20%26%20Human%20Resources%29%202022-23RE%20%281%29.pdf

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு! இன்று (23-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!



### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 112 | வரதை த.பரி வட்டக் கழக செயலாளர் | சௌராஸ்டிரா நகர் 1–வது தெரு, சூளைமேடு ஹை ரோடு, நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன் அருகில், சென்னை–94 | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி தலைமைக்கழக பேச்சாளர் ஜோதி (தலைமைக் கழக இளம் பேச்சாளர்) |
| 2 | 117அ | எல்.தவமணி வட்டக் கழக செயலாளர் | விஜயராகவா சாலை, நக்கீரர் நகர் சந்திப்பில், தேனாம்பேட்டை | கந்திலி கரிகாலன் தலைமைக்கழக பேச்சாளர் எழும்பூர் கோபி தலைமைக் கழக பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணைதலைவர், துணைஅமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, 35 வது வட்டச் செயலாளர் எம்.உமாபதி முன்னிலையில் சவுத் அவனியூ ரோடு முத்தமிழ் நகர், கொடுங்கையூரில் வசிக்கும் மீரான் உசேன் என்பவருக்கு நடைபாதை கடை மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான் ஏற்பாட்டில் அமைத்து தரப்பட்டது. உடன் அவைத் தலைவர் பி.செல்வராஜ், வட்டப் பொருளாளர் இ.சல்மான் பாய், மருத்துவ அணி துணை அமைப்பாளர் அ.ஷேக் அப்துல்லா, ஆசிரியர் எல்.அய்யனார், ஏ.அன்பழகன், ஏ.இக்பால், அகமது, எஸ்.சாதிக் பாஷா, ஏ. சாகிர், உசேன், தனுஷ், பிரபு, அ.அப்துல், கலீம், பஞ்சாட்சலம், எஸ்.யாஸ்மின், ஏ.சுமையா ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற இந்நாள் – முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை –மாதவரம் மாரியம்மன் திருக்கோயில் கட்டுமானப் பணி!

# ரூ.1 கோடி மதிப்பில் ஜனவரி மாதத்திற்குள் முடித்து குடமுழுக்கு நடத்தப்படும்!

## இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.23-

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (21.12.2024) சென்னை, மாதவரம், மாரியம்மன் திருக்கோயிலை புதிய கருங்கல் கட்டுமான திருக்கோயிலாக கட்டுவது குறித்தும், வேணுகோபால் நகர், கைலாசநாதர் திருக்கோயிலில் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருக்குள திருப்பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறவேண்டிய குடமுழுக்குகளை முறையாக நடத்துவதென தீர்மானிக்க ப்பட்டு இதுவரை 2,363 திரு க்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலான மாதவரம் மாரியம்மன் திருகோயிலுக்கு புதிதாக கருங்கல் கட்டுமானத்தில் கோயில் கட்ட வேண்டும் என்று ஊர்மக்கள் ஒன்று கூடி எடுத்த முடிவின்படி மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று ஆய்வு மேற்கொண்டோம்.

### ஜனவரி 2026க்குள் முடிவடையும்!

இத்திருக்கோயில் கருங்கல் கட்டுமானத்திற்கு ரூ. 1.50 கோடி செலவாகும் என மதிப்பிட ப்பட்டு, மாநில வல்லுனர் குழு மற்றும் தொல்லியல் குழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், ரூ.50 இலட்சம் உபயதாரர் நிதியாக பெற்றுத் தருவதாகவும் மீதமுள்ள தொகை இந்து சமய அறநிலைத்துறை சார்பில் வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மக்கள் கேட்டதெல்லாம் செய்து தருகின்ற திராவிட மாடல் அரசு எஞ்சியுள்ள ரூ. 1 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை துறையின் மூலம் செய்து கொடுக்கும். இத்திருப்பணி 2026 ஜனவரி மாதத்திற்குள் முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்திட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் மாதவரம் கற்பகாம்பாள் சமேத கைலாசநாதர் திருக்கோயில் திருக்குளத் திருப்பணி ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அப்பணிகளை இன்றைய தினம் ஆய்வு செய்கின்ற போது இப்பணிக்கு கூடுதல் நிதி தேவை என சட்ட மன்ற உறுப்பினர் தெரிவித்தார். அதனையும் ஏற்று கூடுதல் நிதியை வழங்கி வருகின்ற 2025 மே மாதத்திற்குள் நிறைவு செய்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

### 220 திருக்குளங்களைச் சீரமைக்கும் பணிகள்!

நீர் ஆதாரங்கள் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் உயர்த்திடவும், பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த பயன்படுத்துகின்ற வகையிலும் திருக்குளங்கள் சீரமைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ. 3 கோடி மதிப்பீட்டில் 4 புதிய குளங்கள் அமைக்கவும், 220 திருக்குளங்கள் ரூ. 120.33 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கின்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள், அன்னதானக் கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், முடி காணிக்கை மண்டபம் என அனைத்திலும் தனிக் கவனம் செலுத்தி பக்த ர்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்கின்ற ஒரு ஆட்சி யாக இந்த ஆட்சி திகழ்கிறது.

திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டுகின்ற வகையில் அங்கு பயன்பாட்டிலில் இல்லாத பலமாற்றுப் பொன் இனங்கள் ஒய்வு பெற்ற நீதியரசர்கள் முன்னிலையில் பிரித்தெடுக்கப்பட்டு ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்ப ட்டு வருகின்றன. இதுவரை 23 திருக்கோயில்களில் பிரித்து பிரித்தெடுக்கப்பட்ட பல மாற்றுப் பொன் இனங்களில் 13 திருக்கோயில்களில் பொன் இனங்கள் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த வாரம் ஆனைமலை, பழனி, குணசீலம் ஆகிய திருக்கோயில்களின் பலமாற்றுப் பொன் இனங்கள் மும்பைக்கு அனுப்பப்பட்டுள்ளன. வரும் 27 ஆம் தேதி சமயபுரம் திருக்கோயிலின் சுமார் 526 கிலோ பலமாற்றுப் பொன் இனங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர்கள் திருமதி எஸ்.நித்யகலா, பி.சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! இன்று

# 177 ‘அ’ வட்டத்தில் நல உதவிகள் - தெருமுனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ஆம்பூர் பொய்யாமொழி – ஷேக் அலிமாஸ் அலி – தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் சிறப்புரை!

சென்னை, டிச.23-

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 177 “அ” இளைஞர் அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (23-12-2024 திங்கள் கிழமை) மாலை 6.00 மணிக்கு தண்டீஸ்வரம் மெயின் ரோடு தண்டீஸ்வரம் நகர் லதா சூப்பர் மார்க்கெட் அருகில் நடைபெறுகிறது.

வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கே.ராகுல் குமார் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விருகம்பா க்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, தேர்தல் பணிக்குழு செயலாளர் 177வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ. மணிமாறன், மாவட்ட பொருளாளர் 178 மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே. ஆனந்தம், 175 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம். விநாயகமூர்த்தி, வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் த. ஜெகதீசன் ஆகியோரின் முன்னிலையில் 177”அ “ வட்டக் கழகச் செயலாளர் ஜி.பி.எஸ். பால சதீஷ், 177-வது வட்டக் கழக செயலாளர் பொ.த. மதிவாணன், எம்.ஏ.சங்கர், வி. பார்த்தசாரதி, சி.முருகன், ஜி.நடராஜன், அ.நீலகண்டன், கோ.சிவக்குமார், இரா. ஏழுமலை, பி.சேச்சம்மாள், நா.கண்ணன், கோ.ஸ்ரீனிவாசன் சி பத்தா பா ஸ்ரீனிவாசன் வே. கருணை அழகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் ஆம்பூர் பொய்யாமொழி, இளம் பேச்சாளர் ஷேக் அலிமாஸ் அலி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் சைதை மு.மகேஷ் குமார், ஜெ.எச்.எம்.அசன் மௌலானா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் 13-வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், வேளச்சேரி சாய் ஜெயகாந்தன், எச். வெங்கடேஷ், ஆர்.பாலசுந்தரம், பகுதிக் கழக நிர்வாகிகள் சி.பழனி, பொ.த. எழில்வாணன், நா. டில்லி குமார், சே.மைதிலி, வேளச்சேரி மேற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் த.பார்த்திபன், கே.என். தாமோதரன், எஸ்.முருகவேல், கோபி, க.பாரதிதாசன், வி.சக்திவேல்,

மாவட்ட பிரதிநிதிகள் என். நேசன், ஜெ. பவளவண்ணன், ஆர்.நாகராஜ், வி. கோபாலகிருஷ்ணன், வி.ஜி.மோகன், க.பாலாஜி, ஆ.வடிவேலன், ஏ.வி.ரங்கா, ஜெ. சீதாபதி, கே.ஆர்.பி.பாண்டியன், சி.சூர்யா, மணிவண்ணன்,

பகுதி இளைஞரணி நிர்வாகிகள் எம்.எஸ்.விஸ்வா, வி.சண்முகநாதன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அருண், நடராஜன், ஜெனீத் குமார், ஆர்.சந்திர மௌலி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தி பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அண்ணா நகர் தெற்கு பகுதி 106(அ) வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு வட்ட செயலாளர் இரா. நவீந்திர குமார் தலைமையில் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கழக மூத்த முன்னோடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா ராமச்சந்திரன், எம். கே .மோகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் – ந.இராமலிங்கம் எம்.சி. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா, சேலம் சுஜாதா, இளம் பேச்சாளர் பேரரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் அரிமா DR.நா.சந்திரபாபு, ராணி ரவிச்சந்திரன், ஏ.டி முருகன், கராத்தே ஆனந்தன், அரசு வழக்கறிஞர் நன்மாறன், S.ராம் குமார், வட்டக் கழக செயலாளர்கள் ந. அதியமான்MC, இரா பொன்னுரங்கம், ப.மகேஷ் ராஜா டி கருணாநிதி வி எம் சிவா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்